**Copy of Deposition**

## சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

2025ம் ஆண்டு **மார்ச் மாதம் 07-ம் தேதி** பிரதிவாதி தரப்பு சாட்சி **பி.வா.சா.1-ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண். 11/2024**

**பி.வா.சா:-1 நதியா**

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):-**

வாதி ஜோதிமணி எனக்கு என்ன உறவு முறை என்றால் என் கணவரின் அக்கா ஆவார். எனக்கும் என் கணவருக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் 29.06.2007ம் தேதி அன்று திருமணம் நடந்தது. வாதி விருப்பப்பட்டு அவரது வீட்டிற்கு எதிராக கலப்பு திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். வாதியின் திருமணமானது 20.03.2002ல் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. என் திருமணத்திற்கு பின்னிட்டுதான் வாதியின் திருமணத்தை பற்றி தெரிய வந்தது. என் ஊரும், என் கணவர் ஊரும் பக்கத்து பக்கத்து ஊர் ஆகும். எங்கள் ஊர் பள்ளக்காட்டூர் , என் கணவர் ஊர் வெட்டுக்காட்டூர் , இரண்டு ஊருக்கும் இடையே 2 கி.மீ தூரம் இருக்கும். வாதி வீட்டிற்கு எதிராக திருமணம் செய்து கொண்டு பெங்களூருக்கு சென்றுவிட்டார் என்றால், அந்த விவரம் எனது திருமணத்திற்கு பிறகுதான் தெரிய வந்தது. வாதியின் திருமணத்தின்போது வாதியின் தகப்பனார், தாத்தா, பாட்டி, சகோதரன் ஆகியோர்கள் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள உயில் சாசணம், செட்டில்மென்ட் ஆவணம் ஆகியவை வாதியின் திருமணம் நடைபெற்ற 20.03.2002ம் தேதிக்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். தாவாவில் கண்டுள்ள சொத்துக்கள் மட்டும்தான் குடும்ப சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தரப்பில் 3 உயில் சாசணம், ஒரு செட்டில்மென்ட் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனது தரப்பில் என்னை தவிர யார், யாரை சாட்சியாக விசாரிக்க உள்ளேன்

என்றால் வேலுச்சாமி மற்ற சாட்சிகள் யார் என்று தெரியவில்லை. வேலுச்சாமி என்பவர் வாதியின் தாய்மாமா ஆவார். 3ம் பிரதிவாதி வாதியின் தாயார் அவரது சகோதரர்தான் வேலுச்சாமி. வேலுச்சாமிக்கும், கண்ணம்மாள் மற்றும் வாதி ஜோதிமணி ஆகியோர்களுக்கும் இடையே எவ்வித போக்குவரத்தும் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. எனது கணவர் எந்த வருடம் இறந்தார் என்றால் 04.03.2015ம் தேதி அன்று இறந்தார். எனதுமாமனார் சாமியப்பன் எனது திருமணத்திற்கு முன்பாகவே இறந்துவிட்டார். எனது திருமணத்திற்கு முன்பாக குடும்ப சொத்துக்கள் பற்றிய விவரம் எதுவும் தெரியாது, திருமணத்திற்கு பின்புதாக் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள உயில் சாசணம் எல்லாம் யார் என்னிடம் கொடுத்தது என்றால் என் கணவர்தான் கொடுத்தார். நான் மாரப்ப கவுண்டரை பார்த்துள்ளேன். மாரப்ப கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 2009ம் வருடம் இறந்தார். அவர் இறக்கும்போது சுமார் 90 வயது இருக்கும் என்றால் சரிதான். என் திருமணத்தின்போது அவர் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல, நன்றாகத்தான் இருந்தார். மாரப்ப கவுண்டர் அவர் இறப்பதற்கு 10 வருடங்களுக்கு முன்பாகவே உடல்நிலை சரியில்லாமலும், மனநிலை சரியில்லாமலும், நல்லது, கெட்டது தீர்மானிக்க முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. மாரப்ப கவுண்டர் எழுதி கொடுத்த பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் சொல்ல முடியும். மாரப்ப கவுண்டருக்கு எத்தனை பையன்கள், பெண்கள் என்றால் மாரப்ப கவுண்டருக்கு 2 பையன்கள், ஒரு பெண் ஆகியோர்கள் உள்ளனர். அவர்கள் பெயர் தங்கவேல், சாமியப்பன் மற்றும் மகள் பழனியம்மாள் ஆகும். மகள் பழனியம்மாள்தான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவார். தங்கவேல் என்பவர் என் திருமணத்திற்கு முன்பாகவே இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவர் திருமணம் ஆகி இறந்தாரா அல்லது திருமணம் ஆகாமலேயே இறந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. பள்ளக்காட்டூர் ஆறுமுகம் மகன் கருப்புசாமி யார் என்றால் எங்களுக்கு கணவர் வழியில் பங்காளி

ஆவார். அவர் உயிருடன் உள்ளார். நல்ல ஆரோக்கியமாகத்தான் இருந்து வருகிறார். மாரப்ப கவுண்டர் எழுதிய உயில் சாசணத்தில் என்னென்ன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் பொதுவில் உள்ள சொத்துக்களில் மூன்றில் ஒரு பாகம் எழுதியதாக சொன்னார்கள். நான் மேற்படி உயில்சாசணத்தை படித்து பார்த்துள்ளேன். மாரப்ப கவுண்டர் உயில் சாசணத்தை யாருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் மலையம்மாளுக்கு ஆயுள்பரியந்தம் வழங்கி சண்முகத்திற்கு எழுதி கொடுத்துள்ளார். மாரப்ப கவுண்டர் அவரது மகள் பழனியம்மாள், பேத்தியான வாதி ஜோதிமணிக்கு ஏன் சொத்துக்கள் எழுதவில்லை என்று உயில் சாசணத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அவர்களுக்கு சீர் வரிசை செய்து விட்டதால் சொத்து கொடுக்கவில்லை என எழுதியுள்ளார். பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணத்தில் சண்முகம் சொத்துக்களை அடைந்து கொள்வதற்கும், மகள் பழனியம்மாளுக்கோ, மகன் வழி பேத்தி ஜோதிமணிக்கோ எவ்வித பாத்தியமும் கிடையாது என்று எழுதுப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தை படித்து பார்த்தால்தான் சொல்ல முடியும். பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணம் எழுதப்பட்ட தேதியில் வாதி ஜோதிமணிக்கு சொத்துக்களில் உரிமை இருந்ததா இல்லையா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் எல்லாம் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். உயில் சாசணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் விற்பனை செய்தது போக மீதமுள்ள சொத்துக்கள் தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். வாதி ஜோதிமணிக்கு சொத்தில் உரிமை இல்லை என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றும், அவருக்கு சீர், செனத்தி செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. மாரப்ப கவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என்றால் 27.07.2009ம் தேதியில் இறந்தார். மாரப்ப கவுண்டர் 27.07.2009 ம் தேதியில் இறந்தபிறகுதான் உயில் சாசணமானது அமலுக்கு வரும் என்றால் சரிதான். உயில் சாசணம் அமலுக்கு வந்த சமயத்தில் இந்து வாரிசுரிமை சட்டம் 39/2005 நடைமுறைக்கு வந்துவிட்டதால் மாரப்ப கவுண்டருக்கு முழு சொத்துக்களை பொறுத்து உயில் சாசணம் எழுதுவதற்கு உரிமை இல்லை என்றால் எனக்கு தெரியாது. பி

**Copy of Deposition**

வா.த.சா.ஆ.4 உயில் சாசணத்தில் மாரப்ப கவுண்டரின் கையெழுத்தானது ஒவ்வொரு பக்கத்துக்கு பக்கம் வித்யாசமாக உள்ளது என்றால் சரிதான், அவருக்கு வயதாகிவிட்டதால் அவ்வாறு கையெழுத்து வித்யாசம் உள்ளது. பி வா.த.சா.ஆ.4 உயில் சாசணமானது மாரப்ப கவுண்டரால் எழுதப்படவில்லை என்றும், வாதி ஜோதிமணி அவரது வீட்டிற்கு எதிராக திருமணம் செய்து கொண்டதால் சொத்தில் பாத்தியம் கொண்டாடுவார்கள் என்பதற்காக எனது கணவர், சாட்சிகள் மற்றும் பங்காளிகள் ஆகியோர்கள் சேர்ந்து பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணம் உண்மையானது அல்ல என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் தெரிந்து கொண்டேன். நான் உரிமை கோரும் சொத்திற்கு பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணம் அடிப்படையான ஆவணம் என்றால் சரிதான். 20.12.2004ம் தேதி வரை மாரப்ப கவுண்டர் குடும்பத்தில் பாகபிரிவினை ஏற்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. 2002ம் வருடம் எனது மாமனார் சாமியப்பனும், மாமனாரின் தந்தை மாரப்ப கவுண்டரும் பாகபிரிவினை செய்து கொண்டதாக சொல்லிக்கொண்டார்கள். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் 2002ம் எனது மாமனார் சாமியப்பனும், மாமனாரின் தந்தை மாரப்ப கவுண்டரும் பாகபிரிவினை செய்து கொண்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணமானது உண்மையானது அல்ல என்றும், அதில் உள்ள கையெழுத்து மாரப்ப கவுண்டர் உடையது அல்ல என்றும், பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணமானது நடைமுறைபடுத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மலையம்மாள் என்பவர் மாரப்ப கவுண்டரின் மனைவியும், எனது மாமனாரின் தாயார் என்றால் சரிதான். மலையம்மாள் என்பவர் எழுதிக்கொடுத்தான பி.வா.த.சா.ஆ.5 உயில் சாசணமும், பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணமும் ஒரே தேதியில் ஒரே பத்திர எழுத்தரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.4 உயில் சாசணத்தில் என்ன வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதோ, அதே வாசகத்தை கொண்டுதான்

**Copy of Deposition**

பி.வா.த.சா.ஆ.5 உயில் சாசணமும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரப்ப கவுண்டரை விட மலையம்மாளுக்கு சுமார் 5 வயது குறைவாக இருக்கும் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.5 உயில் சாசணம் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் கணவர் 2015ம் வருடம் கிணற்றில் தவறி விழுந்து இறந்துவிட்டார். 2011ம் வருடமே மேற்படி உயில் சாசணங்களை என் கணவர் வீட்டில் வைத்திருந்ததை நான் பார்த்துள்ளேன். உயில் சாசணம் எழுதியுள்ளது சரிதானா என்று நான் யாரிடமாவது கேட்டேனா என்றால் இல்லை. மலையம்மாள் எப்போது இறந்தார் என்றால் வழக்கு நிலுவையில் 2019ம் வருடம் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் ஏற்பாடு செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் எதிர் வாதம் செய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. மலையம்மாள் இறக்கும் வரை எங்களுடன்தான் இருந்தார். நான்தான் அவருக்கு தேவையான ஆதரவுகளை செய்து வந்தேன். அவர் 100 வயதிற்கு பக்கமாகத்தான் இறந்தார் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கும், மலையம்மாளும் படிப்பறிவு இல்லை என்றால் மாரப்ப கவுண்டர் புத்தகம் படிப்பார், மலையம்மாளுக்கு படிக்க தெரியாது. மலையம்மாள் மகன் இறக்கும் வரை மகன் பேச்சை தட்டாமலும், மகன் இறந்த பிறகு பேரன் பேச்சை தட்டாமலும், பேரன் இறந்த பிறகு எனது பேச்சை தட்டாமலும் இருந்து வந்தார் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.5 உயில் சாசணத்தில் ஏன் மகளுக்கும், பேத்திக்கும் சொத்துக்கள் கொடுக்கவில்லை என்று எழுதவில்லை என்றால் எனக்கு தெரியாது. பி.வா.த.சா.ஆ.5 உயில் சாசணமானது வாதி ஜோதிமணிக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்ற எண்ணத்தில் எனது மாமனார், கணவர், பங்காளிகள், உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து அவசர அவசரமாக உயில் சாசணத்தை தயார் செய்துள்ளார்கள் என்றால் தவறு. பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 5 உயில் சாசணங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றும், அதன் பலன்களை அவர்கள் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி**

**Copy of Deposition**

வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by | |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sdxxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi | |